**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.808/2021 இ.ம.எண்.

எம்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிக்காக பொதுஅதிகார முகவர் ஆஜராகியுள்ளார். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாத்தப்பன் | மாவட்டம் | : ஈரோடு |
| த/பெ.பெயர் | : சுப்பிரமணியம் | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : 71 |
| வட்டம் | : | | |

மனுவின்பெயரில் அழைக்கப்பட்டு கூடுதல் முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் வாதிதரப்பில் 2ம் சாட்சி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை கூடுதல் முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டு ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 19.09.2023ம் தேதியில் உள்ள எஸ்.வசந்தி அவர்களால் எஸ்.பி.சாத்தப்பன் பெயருக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகாரம் ஆவணம் அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.